# THE MORNING STAR.

Vol. 61. Jaffna, Thursday 16th of May. 1901. No. 10.

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE.

*RECEIPTS FOR THE MORNING STAR.*

| | | |
|---|---|---|
| | 1901 | |
| Vambady | Rev. G. J. Trimmer | 1.50 |
| Tellippally | Revs. H. L. Hoisington, Sam Veerakatty and Messrs. R. Ampalapilly, C. Winslow S. Sithamparappilly, A. Kristner, Till Ball, J. Nauny C. Wyramuttu, | 9.00 |
| Halton | Mr. J. M. Thomas | 2.00 |
| Matale | Mr. E. C. Tennent | 2.00 |
| | 1900 | |
| Kurunegally | Mr. Z. W. Chellatury | 4.00 |
| Anuradhapura | Mr. M. Stephen | 2.00 |


THE CEYLON STEAMSHIP COMPANY Ltd.

Weekly Service.

In addition to the usual service of our steamers Lady Gordon and Lady Havelock, the S.S.Amra will run weekly special return trips between Colombo and Jaffna.

The following are the sailing dates from Kangesanturai for the month of May.

Evening of Wednesday the 8th May
" Monday the 13th "
" Saturday the 18th "
" Thursday the 23rd "
" Thursday the 30th "

THE CEYLON STEAMSHIP Co. Ltd.



The Lady Gordon and Lady Havelock are appointed to sail from Kangesanturai for Colombo on the undermentioned dates:—

Via Paumban.

Lady Havelock, from Kangesanturai 7th May
do do do 21st "
do do do 4th June

Via Point Pedro.

Lady Gordon from Kangesanturai on 10th May
do do do 27th "

W. MATHER & SON, Agents

THE JAFFNA COMMERCIAL CORPORATION LIMITED.

Current accounts opened; Fixed deposits received; approved Bills discounted. Money lent on jewelry. Remittances made between Jaffna, Batticaloa and Colombo by Draft and wire transfer.

**From Colombo to Jaffna and vice versa.**

| | | |
|---|---|---|
| Commission on draft for sums under Rs. 500 00 | | 1 °/o |
| " on draft for sums above " 500.00 | | ½ " |
| " on wire transfer under " 500 00 | | 2 " |
| " on wire transfer above " 500.00 | | 1 " |

**From Jaffna to Batticaloa.**

| | |
|---|---|
| Commission on Draft | 1 " |
| Commission on wire transfer | 1½ " |

**From Batticaloa to Jaffna.**

| | |
|---|---|
| Commission on Draft | ½ " |
| Commission on wire transfer | 1 " |

**From Batticaloa to Colombo & vice versa**

| | |
|---|---|
| Commission on Draft | 1 " |
| Commission on wire transfer | 1½ " |

**From Jaffna to Madras Rangoon & Calcutta**

| | |
|---|---|
| Commission on Draft | 1 " |

| | | |
|---|---|---|
| Colombo Bankers. | | The National Bank of India Ltd. |
| Batticaloa | " | The Jaffna Commercial Corporation Ltd |
| Madras | " | The National Bank of India Ltd. |
| Rangoon | " | The National Bank of India Ltd. |
| Calcutta | " | The National Bank of India Ltd. |

WILLIAM MATHER,

## For Sale.

A Columbia chainless bicycle. In excellent condition.

Apply to Annie Young M. D.
Inuvil Hospital.


## Jaffna College.

An examination for admission to Jaffna College will be held on Friday and Saturday the 24th and 25th May at Batticotta, beginning at 9 30 A. M. The following are the subjects for examination:—

Dictation and Translation in both English and Tamil from a Sixth Reader.

Tamil Grammar, இலக்கணச்சுருக்கம்
English Grammar, through Syntax
English, General and Text as for VII standard
Latin Grammar, through regular verbs
Arithmetic, to Compound Interest
Algebra, addition, subtraction, multiplication, division
Geometry, Euclid, first 15 propositions
Geography, General and especially Europe and Asia
English History, 1066 to 1688.

[Those who have passed in Reading, Writing, Arithmetic, Geography and History in the VIIth standard will be admitted without examination]

Candidates will be admitted to the Entrance Class on passing an examination on the subjects taught in our Preparatory (Pre-entrance) class for the year.

Those who have passed the Entrance or Matriculation examination of any Indian University will be admitted to the Junior F. A. class, and those who have passed F. A. into the B. A. class without examination.

All Candidates should bring certificates of good character, and of permission to leave from the Manager or Principal of the institution in which they have been studying.

A fee of Re 1 will be charged to meet the expense of board and incidentals for the two days of examination.

Former students are requested to return for the new term on Monday the 27th, bringing their fees with them. A Senior Local class will be formed if a sufficient number of students apply

R. C. Hastings
Principal


FOR SALE.

One, penny stamp of Ceylon.
Ten, Postage and Inland revenue one penny.

Apply to,
M. STEPHEN.
Anuradhapura.

TEA.

I beg to inform the Public and Traders of Jaffna that I am prepared to deliver, at any Agent's in Matale, pure good drinking Tea direct from the Estate, in quantities of not less than a half chest at a time. *Cash* with order. I can supply unblended Broken Pekoe, Pekoe, Pekoe Souchong, Fannings and Dust, at prices based upon the prices current in Colombo. Special terms for large orders. For particulars apply to

H STOREY.
Warckamure Estate.
Matale


ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction | No. 1148

In the Matter of the Estate of the late Hannah Sinnathankachchi, wife of Carl William Kaunteson Danforth, late of Uduvil, Deceased

Carl William Kauntes on Danforth of Uduvil Petitioner

Vs.

1. Tilliambalam Rajaratnam Payson, and
2. wife Ponnamma, both of Chandiruppay Respondents

This matter coming on for disposal before W. R. B. Sanders Esquire, District Judge, on the 22nd day of April. 1901 in the presence of Mr. S. T. Arnold, Proctor on the part of the abovenamed Petitioner, and the affidavit of the Petitioner, dated the 22nd day of April, 1901, having been read: It is ordered that Letters of administration to the Estate of the late Hannah Sinnattankachchi, wife of Carl William Kauntseon Danforth of Uduvil, deceased, be issued to the Petitioner as husband of the said deceased unless the Respondents or any other persons shall on or before the 23rd day of May, 1901, shew sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 22nd day of April 1901.
W. R. B. SANDERS.
District Judge

ORDER NISI

In the District Court of Badulla

Testamentary Jurisdiction } No. B/189

In the matter of the estate or the late Cathiravaluppillai Arunachalam alias Alfred A. Armstrong of Batticotta Jaffna, late of Passara Deceased.

Tambiah S. Cooke of Jaffna Town Petitioner.

Emily T. Arunachalam of Batticotta Jaffna Respondent.

This matter of the Petition of Tambiah S. Cooke of Jaffna Town praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Cathiravaluppillai Arunachalam alias Alfred A. Armstrong coming on for disposal before F. Bartlett Esquire District Judge on the 25th day of March 1901 and the affidavit of the Petitioner dated the 20th of March 1901 having been read, it is declared that the Petitioner is the Brother-in-law of the said intestate and as such is entitled to have Letters of Administration to the estate of the said intestate issued to him unless the respondent or any other person shall on or, before the 18th day of May 1901 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 25th day of March 1901
F. BARTLETT
District Judge

ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction | No. 1147.

In the matter of the estate of the late Kathirasar Thampar of Valluveddi Deceased

Sekanatar Chinnaiyah of Valluveddi Petitioner

Vs.

1. Meenadchipillai wife of Sekanatar Chinnaiyah of Valluveddi
2. Katirasar Nakamuttu of Polovi
3. Kaliraser Santirasagarer
4. Katiraser Kasippillai
5 Kantapoasegarer Somasuntaram
6. Kantaiyah Varayaretnam his wife
7. Chinnammah
8. Sinnattampi Sivasuppiramaniam his wife
9. Valliyammai
10. Puvanapillai widow of Arumugam Chanmukam
11. Santirasekarer Chinnatampi his wife
12. Meenadchipillai
13. Kasippillai Ilyatampi and
14. wife Sevaratnam alias Ilayapillai all of Atchuveli Respondents.

This matter of the Petition of Sekanatar Chinnaiyah of Valluveddi praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Kathiraser Thampar of Valluveddi coming on for disposal before W. R. B. Sanders Esquire, District Judge, on the 19th day of April 1901 in the presence of Mr. T. C. Changarappillai Proctor on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 19th day of April 1901 having been read, it is declared that the Petitioner is the husband of the Sole heiress of the said intestate and as such is entitled to have Letters of Administration to the estate of the said Intestate issued to him unless the Respondents or any other person shall on or, before the 31st day of May 1901 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 19th day of April 1901
W. R. B. SANDERS.
District Judge.

ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction. } No.1155.

In the matter of the estate of the late Kanapatinatar Sithamparanatar of Meechalai Deceased.

Kanapatinatar Visuvanatar, Udiar of Varany, of Manthuvil Petitioner.

1. Veyalatchy widow of Sithamparanatar of Meechalai
2. Theakar Vytialingam of Manhuvil and
3. Theakar Ponniah of " Respondents.

This matter of the Petition of Kanapatinatar Visuvanatar Udiar of Varany, of Manthuvil praying for letters of Administration to the estate of the abovenamed deceased Kanapatinatar Sithamparanatar of Meechalai coming on for disposal before W. R. B. Sanders Esqnire District Judge, on the 6th day of May 1901 in the presence of Mr. Tambiah S. Cooke Proctor on the part of the Petitioner and affidavit of the Petitioner dated the 2nd day of May 1901 having been read, it is declared that the Petitioner is the brother and one of the heirs of the said intestate and as such is entitled to have letters of administration to the estate of the said intestate issued to him unless the Respondents or any other person shall on or, before the 6th day of June 1901 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 6th day of May 1901
W. R. B. SANDERS.
District Judge

## Local & General.

**Weather.** For the first half of the fortnight we had a good wind from the South-west, but now for five or six days there has been a lull and it has been very hot and sultry. Light showers have fallen in different parts of the peninsula, and the "big monsoon" must be near at hand.

**Mr. Bell of the Jaffna Railway.** has gone south on leave of absence for a slight change. He has been a hard worker and has exposed himself to the tropical sun until his health suffered. We trust he will soon be back thoroughly refreshed by his brief holidays.

**Congregationalism again.** A joint session of the Congregational and Baptist Unions of Great Britain was held the latter part of April. The Chairman of the Congregational Union, Dr. Parker, said that a united Congregational church must be "Congregational in essence but Presbyterian in form."

**Personal.** Mr. Louis Williams B. A. Inspector of schools in the Madras Presidency, is with his family visiting at the home of his father-in-law, Rev. B. H. Rice of Batticotta. We wish them a very pleasant holiday. Mr. Williams is one of whom Jaffna is justly proud.

**St Thomas College.** Warden Buck has resigned his post at St. Thomas College and accepted a position in London. His wife's ill health is assigned as a cause for his leaving Ceylon.

**Comet.** A comet was seen a week ago tonight in the west soon after sunset. It had a well defined tail tho not a very brilliant one. It was evidently on its return from the sun, and already its brilliancy has diminished and soon it will be lost entirely to the naked eye. So far as we have learned Mr. Allen Abraham B. A. of Jaffna College was the first one from Jaffna to call attention to it in the Ceylon Observer. The comet is probably the same one that was reported from South Africa and Australia not long ago.

**Total Eclipse.** A total eclipse of the sun will take place on Saturday the 18th inst. The path of totality passes over Sumatra, Borneo and New Guinea. Here it will be seen only as a partial eclipse from quarter past nine to half past eleven o'clock. It will be worth seeing and we hope the sky will be clear.

**Legal** Mr. P. Chrysostom of Jaffna Town has taken his Warrant as a Proctor of the District Court of Jaffna and he is attending the Jaffna Courts. Mr. Wardsworth of Copay a son of Mr. Charles Wardsworth of Copay has passed his Advocates Final examination. We congratulate the two lawyers and wish them much success. *Com.*

# உதயதாரகை.

நீதி இராச்சியத்தாரை உயர்த்தும், பாவமோ எந்தச் சனங்களுக்கும் இகழ்ச்சி.

கூக ம் புத்தகம்.] யாழ்ப்பாணம், க௲௦கம் ௵ வைகாசி ௴ கக௨ வியாழக்கிழமை. [சங்கியை, க0



## இலங்கைப் புகைக்கப்பற் கொம்பனியாரின்

"லேடிஅவலக்" "லேடி கோடன்" என்னும்



புகைக்கப்பல்கள் காங்கேசன்றுறையிலிருந்து கொழும்புக்குப்போகவிருக்கின்றன.

அவலக் காங்கேசன்றுறையிலிருந்துபாம்பன்வழியாக } 1901 வைகாசி 21 உ ஆனி 4

கோடன்காங்கேசன்றுறையிலிருந்து பருத்தித்துறைவழியாக } " வைகாசி 27 உ

Wᴹ Mather & Son. Agents.

"லேடிகோடன்" "லேடிஅவலக்" கப்பல்கள் வழமைப்பிரகாரம்போய்க்கொண்டிருக்க, "அம்ரு" கப்பல் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையிற்போக்குவரவுசெய்யும்படி ஒழுங்குசெய்யப்பட்டிருக்கின்றது.

பின்வரும் தேதிகளில் "அம்ரு" கப்பல் காங்கேசன்றுறையிலிருந்துகொழும்புக்குப்போகவிருக்கின்றது

1901 ம் ௵ வைகாசி௴ 18 உ சனி பின்னேரம்

" 23 " வியாழன் "

" 30 " வியாழன் "

Wm. MATHER & SON.
AGENTS.

## BRILLIANTS.—வைரங்கள்.

இங்கிலிஷ் கமலங்கள், கடுக்கன்சோடிக்கேற்ற சுத்தமானவைகள், கட்டிய கடுக்கன்கள், சிவப்புக் கடுக்கன், பட்டைச்சிவப்பு, உயர்ந்த புஷ்பராகங்கள், வேண்டுவோர் யாழ்ப்பாணம் நாவலர்வீட்டில் வாட் அன் டேவி மருந்துச்சாலையிலே பெற்றுக்கொள்ளலாம்.

### புதிய மருந்துகள்.

மேகரோகம், மேகவாதம், மேகச்சூடு முதலியவைகளுக்குக் கைகண்ட சஞ்சீவி நன்னாரி ரசாயனம், போத்தல் ரூ. 4. 00

பெண்களுக்குத் தீட்டுக்காலத்தி லுண்டாகும் கர்ப்பவாயுக்குத்துக்குக் கைகண்ட நிச்சயமான கர்ப்பரசாயனம் ரூ. 2. 00

சுரசங்காரி—இது யாழ்ப்பாணமுழுதும்பேர்போன காய்ச்சல்மருந்து. காய்ச்சலை முறியாது மாற்றும். ரூ. 1. 50

இன்னும் எவ்விதநோய்க்கும் பார்த்து நல்ல மருந்துகள் கொடுக்கப்படும்.

வாட் அன் டேவி.
யாழ்ப்பாணம்.


## உதயதாரகை.

### க௲௦கம் ௵ வைகாசி௴ கக௨ உ.

### வால்வெள்ளி.

### A Comet.

சென்றுபோன வியாழக்கிழமை தொடக்கமாய் வானத்தின் மேற்குத்திசையிலே இடையன்கால் (Orion) வெள்ளிக்குக் கீழேயோர் வால்வெள்ளி மிகப் பிரபையாய்த் தோற்றி யிப்போது பிரபையிற் குறைந்துகுறைந்து போகின்றது. சிலநாட்களின்முன்னே தென்ஆபிரிக்கா அவுஸ்திரேலியா என்னு மிடங்களிலே மூன்றுவால்களுடன் தோற்றிய தூமகேது இதுவேபோலும். இப்போது சூரியனுக்குக்கிழக்காகி நமக்குச் சூரியஅஸ்தமனத்தின்பின் தோற்றமிவ்வால்வெள்ளி அப்போது சூரியனுக்குமேற்கேநின்று சூரியஉதயத்தின்முன் அதிகாலையிற் தோற்றியிருத்தல்வேண்டும். காலத்துக்குக்காலம் காத்திராப்பிரகாரமாய்வால்வெள்ளிகள் வானத்திலே தோன்றுகின்றனவாயினும் குறித்த காலவட்டத்தில் மிக நீண்ட அண்டாகாரமான பாதையிற் சூரியனைச்சுற்றிச் செல்வனவாயறியப்பட்ட சில வால்வெள்ளிகளுமுண்டு. ஓர் வால்வெள்ளி 575 வருடங்களுக்கொருமுறையும், வேறொன்று 125 வருடத்துக்கொருமுறையும், இன்னொன்று 75 வருடத்துக்கொருமுறையும், பின்னொன்று 33 வருடத்துக்கொருமுறையும், மேலும் பல வால்வெள்ளிகள் 14, 7, 6, 5, 3 ஆதிய வருடங்களுக்கொருமுறையுஞ் சூரியமண்டலத்தைத் தரிசிப்பவைகளாயிருக்கின்றன. இவ்வகையாய்க் காலவட்டம் அறியப்பட்டனவற்றுள், எங்கி, புரூஷென், டென்னிங் என்பவர்களாற் கண்டறியப்பட்டு அவர்களின் பெயரைப்பெற்ற தூமகேதுக்களே இவ்வருடத்திற் தோற்றுவனவாய்க் கணிக்கப்பட்டிருக்கின்றன. இம்மூன்றுள் முதலாவது மூன்றேகால்வருடத்துக்கொருமுறை தோற்றுவது. புரட்டாசியிற் சூரியனுக்கணித்தாய்வரும். ஆயினும் அது சூரியனுக்குப்பின்னாகி அதன் பிரபைக்குள்மறைந்துபோகுமாகையால் நமக்குத் தோற்றாது. இரண்டாவது ஐந்தரைவருடத்துக்கொருமுறை தோற்றுவது. இது கடைசியாய் 1895 ம் ஆண்டு தோற்றியபோது பிரபையில் மிகக் குறைந்துதோற்றினமையால் இம்முறை காணப்படுமோவென்றதைப்பற்றி வானசாஸ்திரிகளுக்குள் ஐயமிருக்கின்றது. மூன்றாவதானவால்வெள்ளி தூரதிஷ்டிக்கருவியில்மாத்திரந் தோற்றுவதாகிய மிகப் பிரபையற்ற ஒன்று. ஆகவே இப்போதோற்றுவது புதியவொன்றாயிருத்தல்வேண்டும்.

### சூரியகிரகணம்.

### Solar Eclipse.

இந்தமாதம் 18 ந் தி சனிக்கிழமை ஓர் சூரியகிரகணமுண்டாகும். இது பூரண சூரியகிரகணமாயினும் யாழ்ப்பாணத்திலே பாதிக்கிரகணமாகத்தோற்றும். சுமாத்திரா, போணியோ என்னுமிடங்களிற் பூரணகிரகணமாயிருக்கும். யாழ்ப்பாணத்தில்,

| | | | |
|---|---|---|---|
| பரிசகாலம் | முற்பகல் | 9 மணி | 4 நிமிஷம் |
| மத்தியகாலம் | - | 10 மணி | 13 நிமிஷம் |
| மோட்சகாலம் | - | 11 மணி | 29 நிமிஷம் |

பிரமாணம் நூற்றில் நாற்பத்தேழு பங்கு. சூரியவிம்பப்பரமோச்சத்திலிருந்து வலதுபக்கத்தில் 45 பாகையிற் பரசமும் 112 பாகையில் மோட்சமுமாகும்.

### சீனக் கலகம்.

### The Crisis in China.

பீக்கின்நகரிலே கூடிய தத்துவஅரசினரின் தானாபதிகள் சீனர் இறுக்கவேண்டிய தண்டப்பணம் 4 கோடியே 50 இலட்சம் தேல்ஸ் (6 கோடியே 50 இலட்சம்பவுண்) எனத் தீர்த்துச் சீனச்சக்கிரவர்த்திக்கு இத்தீர்மானத்தை அறிவித்திருக்கின்றனர். இத்தீர்மானத்துக்குச் சீனச்சக்கிரவர்த்தி சம்மதித்தபின் தத்துவஅரசினரின் சேனைகள் பீக்கின்நகரைவிட்டு அப்புறப்படுத்தப்படும். அதன்பின்னரே சீனச்சக்கிரவர்த்தி பீக்கின்நகருக்குவந்து தமது அரசாட்சியை ஸ்தாபிப்பர். அதற்கிடையில் சீனவிற் செய்யப்படவேண்டிய திருத்தங்களை யோசித்துத் தீர்மானிக்கும்படி பிறின்ஸ்சிங், லைகங்சாங் ஆதிய எழுபேரை மந்திரிமாராய் நியமித்திருக்கின்றனர். தத்துவஅரசினரின் கேள்விப்படி தாகுஆதிய துறைமுகங்களிலுள்ள கோட்டைகள் அழிக்கப்படுமட்டும் தீந்திசின்பட்டினத்தில் 6,000 பேரும், ஷங்கேக்குவானில் 1,200 பேரு மடங்கிய தத்துவஅரசினரின் சேனையைவைத்து எஞ்சியசேனைகளை யப்புறப்படுத்துவது புத்தியாயிருக்குமெனக் கவுன்ற்உவால்டர்சி தத்துவஅரசினரின் மந்திரிமார்க்கு ஆலோசனை கூறியிருக்கிறார். உடன்படிக்கை ஒழுங்குகள் இவ்வாறு தீர்மானமாவதற்கிடையில் சீனக்கலகக்காரரின் சேனைகளுக்குந் தத்துவஅரசினரின் சேனைகளுக்கும் இடையில் அங்குமிங்குஞ் சண்டைகளும் நடைபெறுகின்றன. மிகுதியாய்ச் சீனர் ஐரோப்பியசேனைகளுக்கு முன்நிற்கவாற்றாது ஓடுகின்றனர். சீனச்சக்கிரவர்த்தி பீக்கின்நகருக்குத் திரும்பிவந்து இராச்சியஆளுகையை ஒழுங்காய்நடத்தத்துவங்கியபின்னரே கலகம் முற்றாய் நீங்குமாம். சீனர் தீர்வைகளைச் சற்றேயேற்றிச் சில புதியவரிகள் அறவிடுவதினாலே தண்டப்பணமிறுக்கத் தீர்மானஞ்செய்திருக்கின்றனர்.

மஞ்சூறியாவிலே சீனக் கலகக்காரர்க்கும் ரூஷியருக்குமிடையிற் சண்டைகள் மேலும் நடைபெறுகின்றன. ரூஷியர் மஞ்சூறியாவிலே சேனை வைத்திருப்பதைப்பற்றி யாப்பானியர் அதி ஆத்திரப்படுகின்றனர். பிரான்சிய பிறதேசகாரிய மந்திரி டெல்காசி ரூஷியதலைநகரியாகிய சேன்பீற்றேஸ்பேக் சென்று சில ஆலோசனைசெய்து திரும்பிவிட்டனர். கோறியாவின் ராசனுக்கு ஓர் பிரான்சிய கொம்பனியார் கடன்கொடுக்கவும் அதற்குக் கோறியாவின்ரேகுப்பகுதியை ஈடுகொடுக்கவும் ஒழுங்குசெய்திருப்பது யாப்பானியர்க்கு அதி எரிசசலைக் கிழப்பிவிட்டிருக்கின்றது. கோறியாவின் ரேகுப்பகுதித் தலைவராயிருந்த அங்கிலேயன் மெஸ். பிறவுன் மறுபடியும் வேலையால் நீக்கப்பட்டிருக்கின்றனர். இதுவும் யாப்பானியர்க்குக் கோபத்தைமூட்டுவதாயிருக்கின்றது. யாப்பானிய பிரபுக்கள்சபைத்தலைவரான பிறின்ஸ் கொனுயி என்பவர் பிரித்தானியா, ஜேர்மனி, அமரிக்காமூன்றும் தமக்கெதிர்வராது தூரத்தில்நிற்குமென்றும், அனத்திலிருக்கும் பிரான்சியதரைச்சேனையையும் சீனக்கடலில்நிற்கும் பிரான்சிய கப்பற்சேனையையும்பற்றி அதிகம் பயப்படவேண்டியதில்லையென்றும், காரியநிருவாகங்கள் அப்படியிருப்பதால் யாப்பானியசேனை மஞ்சூறியாவிலுள்ள ரூஷியசேனையைப் பின்காட்டச்செய்வது பஞ்சியானகாரியமல்லவென்றுங் கூறினர். கொதிகொண்டிருக்கும் யாப்பானியரைச் சாந்திப்படுத்தி யாளுகைசெய்த பிரதமமந்திரி மாக்குவிஸ அயிற்றோவும் அவரைச்சேர்ந்த மந்திரிமாரும் சடுதியாய் வேலையையும்விடவேண்டியவராயினர். இனி எகிர்க்கட்சியார் ஆளுகையைக் கையேற்கும்போது என்னென்ன மாறுதல்களுண்டாகுமோ தெரியவில்லை. மஞ்சூறியாவைப்பற்றிய உடன்படிக்கையை நிறைவேற்றாதபடியால் தமக்குத் திபேத்திலே ஓர்பகுதியைத் தரல்வேண்டுமென்றும், மஞ்சூறியாவில் தமது புகைவீதிகளுக்குச் செய்யப்பட்ட அழிவுக்குப் பணங் கொடுக்கப்படல்வேண்டுமென்றும், தாம்அங்கேவைத்திருக்குஞ்சேனையின்செலவிலொருபகுதியைக் கொடுத்தல்வேண்டுமென்றும், ரூஷியர் சீனரைக் கேட்டிருக்கின்றனர். தமதுகேள்வியை நெருக்குவாராயின் யாப்பானியர் யுத்தத்துக்குக்கிளம்புவது நிச்சயம்போற்தோற்றுகின்றது.

பிரான்சியர் கடன்கொடுப்பதைப்பற்றிச் செய்யப்பட்ட ஒழுங்குக்குக் கோறியாவின்ராசர் கையொப்பமிடப் பின்னிற்கின்றனரென்றும், மஞ்சூறியாவிலே தத்துவஅரசினரெல்லோர்க்கும் சமஉரித்துண்டெனச் சீனச்சக்கிரவர்த்தி விளம்பரஞ் செய்திருக்கின்றனரென்றும் பின்வந்தசெய்திகள் கூறுகின்றன. ரூஷியசேனை மஞ்சூறியாவைவிட்டு வெளிப்படல் வேண்டுமென்பதே யாப்பானியரின் கேள்வி.

### தென்ஆபிரிக்க யுத்தம்.

### South African War.

ஜெனறல்பிறெஞ்சு திரூன்ஸ்வாலின் தென்கீழ்பாகத்திற் படையெடுத்துச்சென்று கலகக்காரரைத் தூரத்திப்பிடித்ததபோல ஜெனறல் றண்டின் ஒறேஞ்சுநாட்டின் வடகீழ்ப்பாகத்தையடக்கும்படி படையெடுத்துச் செல்கின்றனர். போவர்நாடுகளின் மேற்குப்பகுதியிற் படையெடுத்துச்சென்று வடக்குமுகமாய்ப் போன கேணெல் புளூமர் பிறிற்ரோறியாவைக் கிட்டிவருகின்றனர். ஆங்காங்கு நடைபெற்ற சண்டைகளிற் போவர பலர் கொல்லப்பட, அனேகர்சிறைகளாக, சாமான்வண்டிகள் மருந்துச்சாமான்கள் திரளாய்ப் பிடிக்கப்படுகின்றன. திரூன்ஸவாலின் வடபாகத்திலே காட்பீஸற்பொன்றீன் என்னுமிடத்திலே டிவாறியின்கீழாய் 6,000 போவர்கள் சேர்ந்திருப்பதையறிந்து லோட்மெதுவென் ஆதிய அங்கிலோ சேனுபதிகள் வளைந்துசெல்ல, போவர்கள் பலபக்காய்ப்பிரிந்து ஓட்டமெடுத்தனர். இவ்வகையாய் அங்கிலோசேனைகள் பலதிசையாயும் படையெடுத்துச்செல்வதினாலே போவர்சேனுபதிகளின் காரியங்களொன்றும்வாய்க்கவில்லை. முன்னே டியுவெற்கேப்கலனியுட்புகுந்தபோது, போதாநத்தாலுட் படையெடுத்துச் செல்லல்வேண்டுமென்பது போவர்களின் ஒழுங்காயிருந்தது. ஜெனறல்பிறெஞ்சு படையெடுத்துச்சென்றதினாற் போதாவின் காரியமொன்றுஞ் சித்தியாகவில்லை. சிலஇடங்களிலே பதிவிருந்து புகைவண்டிகளைச் சாவிபபிடிப்பதிலேயே போவர்கள் அனுகூலமடைகின்றனர். லோட் கிச்செனருஞ் சமூகமாயிருக்க யோகன்னெஸ்புரியிலே வேறும் இரு சுரங்கங்களில் வேலையாரம்பிக்கப்பட்டது.

### யாழ்ப்பாணம்.

காலநிலை.—Weather—சோழகக்காற்றுச் சிலநாள் வீசியபின் அமைதியாய்விட வெயில் தாங்கொணு அகோரமாயிருக்கின்றது.

அமரிக்கமிஷன் காரியதரிசிகள்.—A Deputation.—அமரிக்க பிறதேசமிஷன்சங்கத்தின்கீழாய் இந்தியாவிலும் இலங்கையிலும் நடைபெறும் சுவிசேஷவேலையைக் கவனிக்குந்நோக்கமாய் அமரிக்காவிலிருந்து சில தானுபதிகளனுப்பப்பட்டு சித்திரைமாதம் 27 ந் திகதி போஸறன்துறையிற் கப்பலேறிவிட்டனர். இதற்காகத் தெரியப்பட்டுவருவோர் அமரிக்கமிஷன்சங்கச் சிரேட்டலிகிதர் கனம். பாட்டன் பண்டிதர் அவர்பாரியார், சிக்காத்கோபட்டினத்தவரான கனம். லோபா பண்டிதர், போஸ்றன்பட்டினத்தவரான மெஸ். உவிற்றிமோர் என்னும் நால்வராம். இவர்கள் ஆனிமாதம் 5 ந் திகதிவரையிற் கொழும்பிலிறங்கி முதலாவதாய் யாழ்ப்பாணம்வந்து ஒருமாதம்வரையிற் தங்கி ஒவ்வொருகிறீஸ்தசபையையுந்தரிசித்துக் காரியங்களைக் கவனித்துப் பின் மதுரைக்குச்சென்று இரண்டுமாசம்வரையிற் தங்குவார்கள்.

களவு.—Theft.—காங்கேசன்றுறைத் தபாற்கந்தோருக்குள்ளும தபால் உத்தியோகஸ்தரின் வீட்டுக்குள்ளும் ஆங்கு வேலையாயிருக்கும் சேவகனொருவன்புகுந்து காசு எழுநூறு ரூபாவையும் தபால் உத்தியோகஸதர்க்குரிய சில நகைகளையுங்களவாடினன். தனதுகாரியங்களையெல்லாம் முடித்தபின் தலையிலேயோர் காயத்தைக்காட்டிக் கள்வர்வந்து தன்னையும் அடித்துக் காசையுங் களவாடியோடினரெனக் கூறினனும் ஆரண்டுவருடம்வரையில் அதி நம்பிக்கைக்குரிய வேலைகாரனாய்நடந்துகொண்டமையால் தபால்உத்தியோகஸ்தர் மெஸ். மெக்கின்றையர் அவனில் ஐயங்கொள்ளவில்லையாயினும், களவைக் கண்டுபிடிக்கும்படி அனுப்பப்பட்ட பொலீசுமாரும் மற்றோரும் அவன்காட்டியகாயம் மற்றோரால் உண்டானதுபோற் காணப்படாமையால் அவன் தானுயுண்டாக்கி யிருக்கவேண்டுமென்றும் அவனே களவையும் நடத்தியிருக்கவேண்டுமென்றும் அயிர்த்து அவனைநெருக்க அவன் பொலீசர்க்குக் காசு எட்டுரூபாயைக்கொடுத்துத் தன்னையோடவிடும்படிகேட்டனனும். அவர்கள் எங்களுக்கு எடுத்ததில் அரைவாசிதருவாயானல் இரகசியத் தோடவிடுவோமெனக் கூறி மேலும் நெருக்க அவன் தன்வீட்டிலே பணம் புதைத்திருக்குமிடத்தைக் காட்டினனும். பணத்தை ஓர் தகரப்பெட்டியில்வைத்து அதை ஆழத்திற் புதைத்து வட்டிலால் மூடி மண்போட்டு அதற்குமேற் கற்களடுக்கி அதற்குமேல் மண்போட்டுமெழுகி அதன்மேல் அடுப்புவைத்து நெல் அவித்துக்கொண்டிருந்த சித்திரம் மிக நூதனமாயிருந்ததாம். களவாடினவன் மல்லாகக்கோட்டில் தமபுநீதவான் முன்னி

லேயிலே, தபால்உத்தியோகஸ்தர் மெஸ். மெக்கின்றையரும் அவரின் உதவியாளான மெஸ். இராசநாயகம் சினெனும் திறவுகோல்களைச் கவலையீனமாய் வைத்திருந்தமையால் அவர்களுக்குப் பாடம்படிப்பிக்கும்படிஇவ்வேலையைச் செய்தேனெனக் கூறியிருக்கின்றனனும். கெட்டிக்காரன்.

புகைவீதி.—Railway.— காங்கேசன்றுறையிலிருந்து யாழ்ப்பாணம்வரைக்கும் இருபபுத் தண்டவாளங்கள் பூட்டியாயிற்றுயினும் சிலவிடங்களிலேயின்னும் மக்கிபோட்டிறுக்கப்படவில்லை. கட்டிடங்களும் வேலை முடியவில்லை. கூலியாட்கள் அகப்படாமையே கொந்திருத்துக்காரர் வேலையை முடித்துக்கொள்ளக்கூடாதிருப்பதின் நியாயமபோற் தோற்றுகின்றது. சிங்களக்கூலியாட்களுங் கப்பல்மார்க்கமாய்வந்து இரண்டுமூன்றுகூட்டமாய் வேலைசெய்கின்றனர். மிகப்பிந்தி ஆரம்பித்த களனிப்பள்ளத்தாக்குப் புகைவீதியிலே நீராவியந்திரமார்க்கமாய்ச் சாமான்கள் கொண்டுபோய் வேலைநடத்தப்படுகின்றது. யாழ்ப்பாணத்துக்கு நீராவியந்திரம் இன்னும்வரவில்லை. புகைவீதிப்போக்குவரவைத் துவக்குவதற்குத் தேசாதிபதி மார்கழி அல்லது தையில் வருவாராம்.

ஆட்கள்.—Personal.—இந்தியாவுக்குச்சென்றிருந்தவராகிய மெஸ். சாமுவேல் லீ அவர்கள் ருய்ப்பூரிலே தாம் முன் வாக்குக்கொடுத்திருந்த மிஸ். மேறி கான்ஷாலியா சாங்கியென்னும் மாதை விவாகஞ்செய்துகொண்டு கொழும்புவந்துசேர்ந்து மறுபடியும் நகரசங்காரிப்பொறுப்பை யேற்றுநடத்துகின்றனர். தனியாளாய்ச் சென்று பாரிசமேதராய்த் திரும்பிய அவர்க்குக் கல்லூரிமாணவரும் உபாத்தியாயர்களுஞ் சேர்ந்து வந்தனோபசாரப்பத்திரம் வாசித்துப் பணப்பையுபகாரங்கொடுத்துச் சங்கைபண்ணினர். இவர் தமக்கு வாழ்க்கைத்துணைவியாய்த் தெரிந்தெடுத்த அம்மாள் அலகபாத்திலே பல உபதிரவங்களுக்கிடையிற் கிறீஸ்தமதந்தழுவி உத்தம கிறீஸ்தசீவியம்நடத்திய பண்டிற் கங்காரன் சாங்கியின் புத்திரியும், ஆதலர் அனாதபிள்ளைகளுக்காயேற்படுத்தப்பட்ட ஓர் போதனாசாலையின் தலைவியாயிருந்து அனுபவப்பட்டவருமாகையால், இவரின் கிறீஸ்த ஊழியங்கல்விமுயற்சிக்கு விசேஷ உதவியாளாயிருப்பாளென நினைக்கின்றோம்.

சென்னைபட்டினப்பகுதியிலே வித்தியாதரிசியாயிருந்தவரான மெஸ். லூயி உவில்லியம்ஸ் அவர்கள் மூன்றுமாசலீவில் தமது மனைவிமக்களுடன் யாழ்ப்பாணம்வந்து வட்டுக்கோட்டையிலே தமது சுற்றமித்திரர் நடுவில் வசிக்கின்றனர்.

சிலகாலமாய்ச் சுகவீனராயிருந்த கச்சேரிமுதலியார் மெஸ். வஸ்திராமபிள்ளை சுகமடைந்து மறுபடியுந்தமது கடமை கையேற்றுநடத்துகின்றனர்.

சுகவீனராயிருக்கும் தழுசகுரு நிந்தலைவர் மெஸ். சந்திரசேகரரின் கடமையை அயிட்டிங்காய்ப்பார்க்கும்படி ஏருட்கம்மிற்றிமுதலியாராயிருந்த மெஸ் ஜே. என். சந்திரசேகரர் நியமிக்கப்பட்டிருக்கின்றனரென அறிகின்றோம்.

பரீட்சைகொடுக்கும்படி கொழும்புசென்றிருந்த உதவிஎண்டர் மெஸ். கார்பரி, பரீட்சையிற் சித்தியாகி மறுபடியும்யாழ்ப்பாணம்வந்து கடமை கையேற்றுநடத்துகின்றனர்.

அப்புக்காத்துமார்க்குரிய கடைசிப் பரீட்சைக்குச் சென்றவர்களான யாழ்ப்பாணவாலிபர் இருவரி லொருவரான மெஸ். உவாட்ஸவோத் சித்தியாயினரென அறிகிறோம்.

தரணிமார்க்குரிய பரீட்சைகள்கடந்தவரான மெஸ். பி. எஸ். கிறிசாஸதம் சுப்பிறீங்கோட்டுநீதிபதிமுன்னிலையிற்சத்தியஞ்செய்து யாழ்ப்பாணத்தில் வேலைபார்க்க உத்தரவுபெற்றிருக்கின்றனர்.

சில வருடங்களின்முன்னே கற்குத்தாச் சர்வகலாசாலையிற் பிவேசப்பரீட்சையில் விசேஷசித்தியடைந்தவளான யாழ்ப்பாணச் சீதாரி மாது மிஸ். நல்லம்மா உவில்லியம்ஸ் வைத்தியங்கற்கும்படி சென்னைபட்டினஞ்சென்றிருக்கின்றனர்.

விவாகம்.—Wedding.—போனமாதம் 27 ந் திகதி சனிக்கிழமை திண்ணைவேலி மெஸ். க. அருட்பிரகாசஉபாத்தியாயரின் கனிஷ்டபுத்திரன் மெஸ். உ. இராசையா என்பவர், சங்கானைவாசரும் சிங்கப்பூர்ப்பகுதியில் ஓவசியராயிருந்து காலஞ்சென்றுபோனவருமாகிய மெஸ். யோன் தம்பையா என்பவரின் சிரேஷ்டபுத்திரி சாளொற் இராசம்மாவைப் பாணிக்கிரகணஞ்செய்தனர். திரளானசுற்றமித்திரர் மேளதாளவாத்தியத்தோடு சங்கானைத் தேவாலயத்திற் கூடியிருக்க விவாகாராதனை கனம் சேஸறிங்ஸ் ஐயரவர்களால் நடத்தப்பட்டது. மணமக்கள் தீர்க்காயுள்பெறப் பகவான் அருள்பாலிப்பாராக.

---

## இலங்கை

மெஸ். நிக்கலஸ்கூல்ட் "இன்டிப்பென்றென்ற்" பத்திரிகைக்கெதிராய்த்தொடுத்த மானநட்ட வழக்கு இப்போது கொழும்புடிஸ்றிக்கோட்டிலே மெஸ். பிறவுன நீதிபதிக்குமுன்பாக விளங்கப்படுகின்றது. மெஸ். கூல்ட் தாமே வழக்காளியும் தமது அப்புக்காத்துமாய் நின்று வழக்கைநடத்துகிறார். மெஸ். குக், மெஸ். டையஸ என்னும் நீதிபதிகளொருவர்பின்னொருவராய் இவ்வழக்கை விளங்கக்கூப்பிட்டபோது அவர்களைப் பற்றியும் சிலகாரியங்கள் விளக்கத்தில் வருமாகையால் அவர்கள் விளங்கக்கூடாதென மெஸ். கூல்ட் ஆட்சேபனைகூறியது புதினப்பேட்சிகள் ஞாபகத்திருக்கும். அவர் தமது முறைப்பாடுசொல்லவே இரண்டுமுழுநாட்கள்சென்றன. 30 வருடங்களுக்குமுன்நடந்த சம்பவங்களையெல்லாமிழுத்து அவரையுமிவரையுஞ் சாடித் தமது முறைப்பாட்டைக் கூறியபோது கடூரமான சில வார்த்தைகளைக்கூறி எதிர்ப்பக்க அப்புக்காத்து மெஸ். உவீன்மனைச் சுட்டிக்காட்டியபோது நீதிபதி மெஸ். பிறவுன் கோபமுகங்காட்ட, "நீர் இந்த வழக்கில் நீதிசெய்கிறவராயல்ல ஒருபக்கஞ்சாய்ந்தவராய்க் காணப்படுகிறீர். அது நேற்றுக்காலமே எனக்குத் தெளிவாயிற்று" என மெஸ். கூல்ட் நீதிபதியைப்பார்த்துக் கூறினர். உடனே நீதிபதி மெஸ். கூல்டை விளித்து கோட்டுநிந்தாட்சணைக்காக உன்னை ஏன் தண்டிக்கக்கூடாதென்பதைப்பற்றி இந்த வழக்குமுடிவுக்கு அடுத்தநாள் நீ நியாயங்காட்டல்வேண்டுமெனக் கூறினர்.

